# தந்தையர் தினம்! - 2023

எந்தை, நுந்தை தந்தை எனவாய்,
தன்மை,முன்னிலை படர்கைக்கு;
தனியே சொற்கள் தமிழில் உண்டு!
இனிதாய் உறவை ஓர் குடையில்,

கண்டதாம் குறுந்தொகைப் பாடலது!
களிப்பினில் பாரதி தானும் பாடி,
**தந்தையர் நாடெனும்போதினிலே,**
**ஒரு சக்தி பிறக்குது மூச்சினிலே!** யென,

பொதுவுடைமைச் சூடியே மகிழ்ந்திடுவான்!
தந்தையை நாமும் மறப்போமோ?
தந்தையே அறிவின் வழிகாட்டி!
ஆற்றல் பெருகிடத் தூண்டுகோலாம்!

**தந்தையர் நாள்** தனைக் கொண்டாடி,
தகைவுடன் ஓராண்டு மறக்காமல்,
அறிவுரை தன்னை மனம்சூடி,
தெளிவுடன் என்றும் வாழ்ந்திருப்போம்!

- **கவிவளவன்**. 18-06-2023 (காலை 11-45)

